ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2289/07 - 2022 ජූලි මස 18 වැනි සඳුදා - 2022.07.18
*2289/07 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

*ச.வ.சீ.எவ். 1/64*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் பதில் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
பதில் சனாதிபதி.
(அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்
(இ) என்னும் உட்பந்தியின் நியதிகளின்படி).

கொழும்பு,
*2022, யூலை 18.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் *2022* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

1A - G 37093 — 366 (2022/07)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I

### பொது

பொருள்கோடல்.

*2. (1) இவ்வொழுங்குவிதிகளில் ''சனாதிபதி'' என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் நியதிகளின்படி பதில் சனாதிபதி எனப் பொருள்படும்.*

*(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில், அதனகத்து வேறேதேனுமொரு வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது அதனகத்து வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-*

*''சட்டத்துறைத் தலைமையதிபதி'' என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக, மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியை, மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை, பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை,சிரேட்ட அரச சட்டவாதியை, அரச சட்டவாதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சட்டத்தரணியை உள்ளடக்கும்;*

*''ஆயுதந்தாங்கிய படைகள்'' என்பது, முறையே (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம் மற்றும் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம் என்பவற்றினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தரைப்படை; இலங்கைக் கடற்படை; மற்றும் இலங்கை வான்படை எனப் பொருள்படும்;*

*''தகுதிவாய்ந்த அதிகாரி'' என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக, அத்தகைய ஒழுங்குவிதியில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருப்பதற்குப் பெயரினால் அல்லது பதவியினால் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;*

*''அவசரகால ஒழுங்குவிதி'' என்பது,(40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட இந்த ஒழுங்குவிதிகள் அல்லது வேறு எவையேனும் ஒழுங்குவிதிகள் என்று பொருள்படும்;*

*''அத்தியாவசிய சேவை'' என்பது, பொதுப் பயன்பாட்டுக்கானதாகவுள்ள அல்லது தேசியப் பாதுகாப்புக்கு அல்லது பொது ஒழுங்கைப் பேணிக்காப்பதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாகவுள்ள ஏதேனும் சேவை என்று பொருள்படுமென்பதுடன், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது அதன் கிளையையும் உள்ளடக்கும்;*

*''பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி'' என்பது, எவரேனும் சிரேட்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும்;*

*''காணி'' என்பது, நீர் செறிந்துள்ள நிலத்தையும் வீடுகளின் அல்லது கட்டிடங்களின் பகுதிகளையும் உள்ளடக்கும்;*

*''பொலிசு அலுவலர்'' என்பது,(53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பொலிசுப் படையிலுள்ள உறுப்பினரொருவர் என்று பொருள்படும்;*

*''பகிரங்க அலுவலர்'' என்பது,அரசியலமைப்பிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;*

*''இலங்கை'' என்பது,அதன் ஆள்புல நீர்ப்பரப்புகளையும் ஆள்புல வான்பரப்புக்களையும் உள்ளடக்கும்.*

*(3) (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச்சட்டம், ஒரு சட்டத்தின் அல்லது கட்டளைச்சட்டத்தின் அல்லது தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் பொருள்கோடலுக்கு அது ஏற்புடையதாகின்றவாறு, ஓர் அவசரகால ஒழுங்குவிதியினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் கட்டளைகளினதும் அல்லது விதிகளினதும் பொருள்கோடலுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.*

(4) ஏதேனும் ஆவணத்தில் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி பற்றிய ஏதேனும் குறிப்பீடு, முரணான உட்கருத்து தென்பட்டாலொழிய, (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறான அவ்வொழுங்குவிதிக்கான குறிப்பீடாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியானது, அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பணிப்பில் அல்லது கட்டளையில் காலப்பகுதியொன்றைக் குறித்துரைக்கப்படுவதனைத் தேவைப்படுத்துமிடத்தும் அல்லது இயலச்செய்யுமிடத்தும், அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை அத்தகைய காலப்பகுதியெதனையும் குறித்துரைக்காதவிடத்தும், அத்தகைய காலப்பகுதியானது, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை எவ்வொழுங்குவிதியின்கீழ் விடுக்கப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அவ்வொழுங்குவிதி வலுவுடையதாயிருக்கும் காலப்பகுதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

*அவசரகாலத் தத்துவங்கள், சனாதிபதியின் தத்துவங்களுக்கு மேலதிகமான வையாகவிருத்தல்.*

3. வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், சனாதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்குச் சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட வேறு எவையேனும் உரிமைகளுக்கு அல்லது தத்துவங்களுக்கு மேலதிகமானவையாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகாது.

*சனாதிபதியின் தத்துவங்களை அமைச்சருக்குக் கையளித்தல்.*

4. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் சனாதிபதிக்கு அளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, சனாதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அமைச்சரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

*தகுதிவாய்ந்த அதிகாரியை நியமித்தல்.*

5. (1) சனாதிபதி, இலங்கை முழுவதற்குமாக அல்லது எவரேனுமாள் எந்தக் கடிதத்தின்மூலம் நியமிக்கப்படுகின்றாரோ அந்தக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்காக அல்லது இடத்துக்காகப் பொதுவாக அல்லது விசேடமாக ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படக்கூடிய ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக அத்தகைய ஆளைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாமென்பதுடன் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அந்நோக்கங்களுள் அத்தகையவற்றுக்கு வரையறுக்கவும்படலாம்:

ஆயின்,இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும்,அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பிற்கென அல்லது இடத்திற்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நியமிக்கப்படுவதைத் தடைசெய்வதாகக் கருதப்படலாகாது.

(2) பெயர் குறிப்பிடப்பட்ட பதவியொன்றை வகிப்பவர், தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அப்போது, முரணாக வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, அந்த நியமனம், அப்பெயர்குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய கடமைகளை அப்போதைக்குப் புரிகின்ற ஆளுக்கு நீடிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல்.*

6. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எவையேனும் விசேட ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக எவரேனும் ஆளுக்குச் விடுக்கவிருக்கும் ஓர் அறிவித்தலை அந்த ஆளுக்கு கையளிப்பதன்மூலம் அல்லது அவர் கடைசியாக வசித்த இடத்திற்கு அல்லது வழக்கமான வாழிடத்துக்கு அல்லது அவர்தொழிலிடத்திற்கு முகவரியிடப்பட்ட அஞ்சலில் அதனை அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

*கட்டளை முதலானவற்றை இல்லாதொழித்தலும் வேறுபடுத்தலும்.*

7. ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குவதற்கு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவமும், அக்கட்டளையை அல்லது விதியை இல்லாதொழிப்பதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு அதேமுறையிலும், நிபந்தனைகளெவையுமிருப்பின், அவற்றுக்கமையவும் பிரயோகிக்கப்படற்பாலதான ஒரு தத்துவத்தையும் உள்ளடக்குவதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### அத்தியாவசிய சேவைகள்

*அத்தியாவசிய சேவைகளை ஒருங்கிணைப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியை நியமித்தல்.*

8. (1) சனாதிபதி, கட்டளைமூலம், முழு இலங்கைக்குமான அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியாகவிருப்பதற்குப் பெயரினால் அல்லது பதவியினால் எவரேனுமாளை நியமிக்கலாம். அத்தியாவசிய சேவைகளை வழங்குதலும் பேணுதலும் தொடர்பான எல்லாச் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதும் ஒருங்கிணைப்பதும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய மேலதிக ஆணையாளர்களை, பிரதி ஆணையாளர்களை அல்லது உதவி ஆணையாளர்களைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம்.

(3) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் மேலதிக ஆணையாளருக்கு, பிரதி ஆணையாளருக்கு அல்லது உதவி ஆணையாளருக்கு, இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது அவற்றின்கீழ் அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதிகளின் கீழான கடமைகளைப் புரியும் நோக்கத்துக்காக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, எந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு இவ்வொழுங்குவிதிகளின்கீழான ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் தலைமையதிபதியை கலந்தாலோசித்து பிரயோகிக்கலாம்.

(5) அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் தலைமையதிபதி,-

(அ) இவ்வொழுங்குவிதிகளின்கீழான ஏதேனும் தத்துவம் எந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு; அத்துடன்

(ஆ) 40 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் ஒருங்கிணைத்தல் அலுவலருக்கு,

அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை விடுக்கலாமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் இணங்கியொழுகுதல், விடயத்துக்கேற்ப, அத்தகைய அதிகாரியின், அலுவலரின் அல்லது ஒருங்கிணைத்தல் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

*அத்தியாவசிய சேவைகள்.*

9. (1) சனாதிபதி, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், பொது ஒழுங்கைப் பேணுவதற்காகவும் பேணிக்காப்பதற்காகவும், சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்காகவும் ஏதேனும் சேவையை அத்தியாவசியமான சேவையாக வெளிப்படுத்துவது அவசியமாகவிருக்கின்றதெனத் தோன்றினால் அவ்வாறு செய்யலாம்.

(2) ஓராம் பந்தியின் நியதிகளின்படி அத்தியாவசியமானவொரு சேவையாகச் சனாதிபதியினால் வெளிப்படுத்தப்பட்ட சேவையொன்று சம்பந்தமான ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளவரும் அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும்-

(அ) அத்தகைய கட்டளைத் திகதியிலிருந்து ஒரு நாள் கழிந்தபின்னர் அவரது வேலைத்தலத்துக்கு அல்லது தொழிலிடத்துக்கு அல்லது அவரது தொழில்தருநரினால் அல்லது அவரது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஆளொருவரினால் காலத்துக்குக்காலம் பெயர்குறிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு இடத்திற்குச் சட்டமுறையான காரணமின்றி வருகைதரத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவரும்; அல்லது

(ஆ) அத்தகைய சேவையில் அவரது தொழில் நியதிநிபந்தனைகளுக்கிணங்க அவர் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக வழமையான வேலை நாளின் முழுக் காலப்பகுதியின்

போதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின்போதும் வேலை செய்யாமல், சட்டமுறையான காரணமின்றி வேலை செய்வதற்குத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவரும் அல்லது வேலைக்கு வராதிருக்கின்றவரும்; அல்லது

(இ) அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து ஒருநாள் கழிந்தபின்னர் அவரது தொழில்தருநரினால் அல்லது அவரது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஆளொருவரினால் புரிவதற்கு அவர் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையைப் புரிவதற்குத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவரும்; அல்லது

(ஈ) ஒரு குறித்துரைக்கப்பட்ட சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவராகவிருந்து அத்தகைய வேலையைப் புரிவதற்காக அவரது தொழில்தருநரினால் அல்லது அவரது தொழில்தருநரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஆளொருவரினால் காலத்துக்குக்காலம் பணிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய வேலையைப் புரிவதற்கு அத்தகைய நேரத்தில் அல்லது இடத்தில் அல்லது அத்தகைய தொழில்தருநரினால் அல்லது அத்தகைய ஆளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளினுள் (அத்தகைய நேரம் அல்லது இடம் அல்லது காலப்பகுதி, வழமையான வேலை மணித்தியாலங்களினுள் அல்லது அவற்றுக்கு வெளியே இருந்தாலுஞ்சரி அல்லது விடுமுறை நாட்களாகவிருந்தாலுஞ்சரி) சட்டமுறையான காரணமின்றிப் புரிவதற்குத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவருமான எவரேனுமாள் ஒரு வேலைநிறுத்தத்தை, அல்லது வேறு ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கையை முன்னெடுத்துச்செல்வதில் அவ்வாறு வருகைதர அல்லது அவ்வாறு வேலை செய்ய அவர் தவறியுள்ளார் அல்லது மறுத்துள்ளார் என்பது எவ்வாறிருப்பினும்,

வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது அவரது தொழிலை ஆளுகின்ற ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதிநிபந்தனைகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவரது தொழிலை உடனடியாக முடிவுறுத்தியுள்ளார் அல்லது வறிதாக்கியுள்ளார் என எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் மேலதிகமாக, தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

(3) ஏதேனும் சேவை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதியினால் அத்தியாவசிய சேவையொன்றாக வெளிப்படுத்தப்படுமிடத்து,-

(அ) எத்தகையதுமான எம்முறையிலும்-

(i) அச்சேவையைத் தடைசெய்கின்ற, அதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அதனைத் தாமதிக்கின்ற அல்லது அது கொண்டு நடாத்தப்படுவதனை மட்டுப்படுத்துகின்ற; அல்லது

(ii) அச்சேவையைக் கொண்டுநடாத்துவதில் அல்லது அது சம்பந்தமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறெவரேனும் ஆட்களை அவர்களது வேலைத்தலத்துக்கு வருகைதருவதிலிருந்து தவிர்க்கும்வகையில் தடை செய்கின்ற, அவர்களுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அல்லது அவர்களைத் தடுக்கின்ற; அல்லது

(iii) அச்சேவையைக் கொண்டு நடாத்துவதில் அல்லது அது சம்பந்தமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறெவரேனுமாளை அவரது வேலைத்தலத்திற்கு வருவதிலிருந்து தவிர்ப்பதற்கு ஏவுகின்ற, தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற; அல்லது

(iv) ஓர் அரசாங்கத் திணைக்களமாகவுள்ள அல்லது அதன் கிளையாகவுள்ள அச்சேவைக்குப் பதிலாக அல்லது அதற்கு நிகராக வேறேதேனும் சேவையைத் தாபிப்பதனை அல்லது பேணுவதனை வலுக்கட்டாயப்படுத்துகின்ற, ஏவுகின்ற, தூண்டுகின்ற அல்லது அதனை ஊக்குவிக்கின்ற; அல்லது

(v) அச்சேவையைக் கொண்டு நடாத்துவதில், அல்லது அதுசம்பந்தமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறெவரேனுமாளை அவரது தொழிலைக் கையளிக்கும்படி அல்லது தொழிலிலிருந்து விலகும்படி (அத்தகைய வேறு ஆள் அதன் விளைவாக அவ்வாறு கையளித்தாலுஞ்சரி அல்லது விலகினாலுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) வலுக்கட்டாயப்படுத்துகின்ற, ஏவுகின்ற, தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற; அல்லது

(vi) அச்சேவையைக் கொண்டு நடாத்துவதில் அல்லது அதுசம்பந்தமாகத் தொழிலை முனைவதிலிருந்து அல்லது ஏற்றுக்கொள்வதிலிருந்து வேறெவரேனுமாளைத் தடுக்கின்ற,

எவரேனுமாள்;

(ஆ) ஏதேனும் உடல்ரீதியான செயல்மூலம் அல்லது ஏதேனும் பேச்சு அல்லது எழுத்துமூலம் இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட செயலொன்றைப் புரிவதற்கு வேறெவரேனுமாளை ஏவுகின்ற, தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற எவரேனுமாள், (அத்தகைய வேறு ஆள் அதன்விளைவாக அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலைப் புரிந்தாலுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி), தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது மூன்றாண்டுகளுக்கு அதிகமாகவிராதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் நடைமுறை காரணமாக அவரது தொழிலை முடிவுறுத்தியவராக அல்லது வறிதாக்கியவராகக் கருதப்படும் எவரேனுமாள், அத்தகைய முடிவுறுத்துகை அல்லது வறிதாக்குகையிலிருந்து மூன்று நாட்களினுள், அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் குடிமனையை வறிதாக்குதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய குடிமனையை வறிதாக்குவதற்குத் தவறுகின்ற எவரேனுமாள் இவ்வொழுங்குவிதிகளின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(5) எவரேனுமாள் இவ்வொழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறுக்கு ஏதேனும் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அப்போது, அத்தகைய தவறுக்காக மேல் நீதிமன்றம் விதிக்கவேண்டிய வேறேதேனும் தண்டத்துடன்சேர்த்து மேலதிகமாக-

(அ) அவ்வாளின் அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும், அத்தகைய குற்றத்தீர்ப்பின் பயனைக்கொண்டு, குடியரசுக்கு இழப்பிக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்குவருகின்ற திகதிக்குப்பின்னர் அத்தகைய ஆளினால் பயனுறுத்தப்பட்ட அத்தகைய ஆதனங்களின் ஏதேனும் பராதீனப்படுத்துகை அல்லது வேறு கையுதிர்ப்பு வெற்றானதும் வறிதானதுமாக இருந்துள்ளதாகவும் இருக்கின்றதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(6) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஏதேனும் சேவை அத்தியாவசிய சேவையொன்றாகச் சனாதிபதியினால் வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தியாவசியமானதென வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது அதனைச் சேர்ந்த எவரேனும் அலுவலரின்,சேவையாளரின், ஊழியரின் அல்லது முகவரின் சேவைகள், அவசியமெனக் கருதப்படும் இடங்களிலெல்லாம், பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் அல்லது இயைபான விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கலந்தாலோசனையுடன், அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் தேவைக்கெடுக்கப்படலாம்.

(7) இவ்வொழுங்குவிதியில்-

''குடிமனை'' என்பது, வதிவு நோக்கத்துக்காக இருப்பாட்சிகொள்ளப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டிடம் அல்லது அறை அல்லது வேறு இடவசதி

என்று பொருளாகுமென்பதுடன் அத்தகைய கட்டிடம், அறை அல்லது வேறு இடவசதி அமைந்துள்ள ஏதேனும் காணியையும் அல்லது வளவையும் உள்ளடக்கும்; அத்துடன்

''குறித்துரைக்கப்பட்ட சேவை'' என்பது, ஆளொருவர் எந்த அத்தியாவசிய சேவை சம்பந்தமான ஏதேனும் வேலையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளரோ அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ளாரோ அந்த அத்தியாவசிய சேவையில் வழமையான வேலை மணித்தியாலங்களுக்கு வெளியே அல்லது விடுமுறைநாட்களில் வேலை செய்வதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவராகவுள்ளதும் (1) ஆம் பந்தியின்கீழ் சனாதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட சேவையொன்றாக வெளிப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் அத்தியாவசிய சேவை என்று பொருளாகும்.

## பாகம் III

### நுழைவதற்கான உரிமை

அதிகாரமளிக்கப் படாத நுழைவைத் தடைசெய்தல்.

10. (1) சனாதிபதி இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக ஏதேனும் அத்தியாவசிய சேவை தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரியொருவராவதற்கு பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி விசேட முற்காப்புகள் அத்தியாவசிய சேவையை பேணுவதற்கென முழுமையாக அல்லது பிரதானமாக இருப்பாட்சி கொள்ளப்பட்ட ஏதேனும் இடப்பரப்பு, இடம் அல்லது வளவுகளினுள் அதிகாரமளிக்கப்படாத ஆட்களின் நுழைவைத் தடுப்பதற்கு எடுக்கப்படுதல் வேண்டுமென அபிப்பிராயப்படின், தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அதிகாரி அல்லது ஆளின் அவ்விடப்பரப்பில் அல்லது இடத்தில் அல்லது வளவுகளினுள் அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விலக்களிப்பின் ஆளெவரும் உள்நுழைதலோ தங்கியிருத்தலோ ஆகாது எனக் கட்டளை மூலம் பணிக்கலாம்.

(3) எவரேனுமாள், இவ்வொழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு முரணாக ஏதேனும் இடப்பரப்பில், இடத்தில் அல்லது வளவுகளினுள் இருப்பின், அப்போது அவருக்கெதிராக வேறு ஏதேனும் செயலுக்கு பங்கமின்றி அவர் எவரேனும் பொலிசு அலுவலரினால் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் அதிலிருந்து அகற்றப்படலாம்.

## பாகம் IV

### தேடுகையும் கைதும்

தவறுகளுக்கான தேடுகையும் கைதும்.

11. (1) எவரேனும் பொலிசு அலுவலர் அல்லது ஆயுதம் தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினர் இவ்வொழுங்குவிதிகளின்கீழான தவறொன்று அல்லது (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 345, 354, 355, 356, 357, 358, 359, 360, 360அ, 360ஆ, 360இ மற்றும் பிரிவுகள் 364, 365, 365அ, 365ஆ மற்றும் பிரிவுகள் 427 இலிருந்து 446 வரையான பிரிவுகளின் நியதிகளின்படி ஏதேனும் தவறைப் புரிந்துகொண்டிருக்கின்ற அல்லது தவறைப்புரிந்திருக்கின்ற அல்லது அவ்வாள்மீது சம்மந்தப்பட்டிருப்பதாக அல்லது புரிந்திருப்பதாக சந்தேகிக்கப்படுவதற்கு நியாயமான ஏதுவைக் கொண்டிருக்கின்ற எவரேனுமாளை அத்தகைய தேடுகைக்காக அல்லது பிடியாணையின்றி கைது செய்வதற்கான நோக்கத்திற்காக தேடுகை செய்து தடுத்துவைக்கலாம் என்பதுடன் அத்துடன் தவறின் புரிகையில் பயன்படுத்தப்பட்ட அல்லது தொடர்புபடுகின்ற எத்தன்மைக்கான ஏதேனும் வாகனம், கப்பல், பொருள், பதார்த்தம் அல்லது பண்டங்களைத் தேடுதல் செய்யலாம் கைப்பற்றலாம் அகற்றலாம் அத்துடன் தடுத்துவைக்கலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் ஆயுதம் தாங்கிய படைகளின் உறுப்பினரொருவரினால் கைது செய்யப்பட்ட எவரேனுமாள், இருபத்து நான்கு மணித்தியாலங்களினுள் அண்மித்த பொலிசு நிலையத்துக்கு கையளித்தல் வேண்டும்.

(3) பொலிசு அலுவலரினால் கைது செய்யப்பட்ட எவரேனுமாள், அண்மித்த பொலிசு நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் பந்தியின் கீழ் தேடுகையொன்றை நடாத்துகின்ற எவரேனுமாள், தேடப்பட்ட வளவுகளில், இடத்தில், வாகனத்தில் அல்லது கலத்தில் உள்ள வேறு எவரேனும் ஆளை அல்லது தேடுகை நோக்கத்துடன் அல்லது தேடுகை நோக்கம் தொடர்பாக ஏதேனும் கருமம் தொடர்பில் தேடப்பட்ட ஆளை கேள்விக்குட்படுத்தலாம்.

(5) நான்காம் பந்தியின் கீழ் கேள்விக்குட்படுத்தப்படுகின்ற ஆள் ஒவ்வொருவரும் எந்தக் கருமத்தின் மீது அவர் கேள்விக்குட்படுத்தப்படுகின்றாரோ அந்தக் கருமம் தொடர்பில் அவருக்கு அறிவுக்கு எட்டியவரையில் அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியின் கீழ் தேடப்படவேண்டிய எவையேனும் வகையில், இடத்தில், வாகனத்தில் அல்லது கலத்தில் வசிக்கின்ற அல்லது பொறுப்பாகவுள்ள ஆள் ஒருவர் தேடுதலை நடாத்துகின்ற ஆளொருவரின் கோரிக்கையின் மீது அவருக்கு அதற்கான இலவச அனுமதி அளித்தல் வேண்டுமென்பதுடன் அதன்கண் தேடுதலொன்றுக்கான நியாயமான வசதிகள் யாவற்றையும் வழங்குதலும் வேண்டும்.

(7) இவ்வொழுங்குவிதியின் கீழ் தேடுதலொன்றை நடாத்துகின்ற ஆளொருவர், தேடப்படவேண்டிய வளவு, இடம்,வாகனம் அல்லது கலம் என்பவற்றுள் நுழைதலுக்கு பயன்கொடுக்கும் பொருட்டு ஏதேனும் வெளிப்புற அல்லது உட்புறக் கதவை அல்லது யன்னலைத் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம்.

(8) பெண்ணொருவரைத் தேடுவதற்கு அவசியமேற்படுத்தும் போதெல்லாம் தேடுதலானது இன்னொரு பெண்ணினால் செய்யப்படுதல் வேண்டும்.

(9) கைது செய்யும் அலுவலர் பொலிசு அலுவலரொருவராகவிருக்குமிடத்து, எந்த இடப்பரப்பில் கைது இடம்பெற்றதோ அந்த இடப்பரப்பிலுள்ள பொலிசு நிலையத்தின் பொறுப்பு அலுவலருக்கு அத்துடன் கைது செய்யும் அலுவலர் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக இருக்குமிடத்து இந்த இடப்பரப்பில் கைது மேற்கொள்ளப்பட்டதோ எந்த இடப்பரப்பில் ஏவுநருக்கு (1) ஆம் பந்தியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட கைதுபற்றி அறிக்கையிடுவதற்கு கைது இடம்பெற்ற இருபத்திநான்கு மணித்தியாலத்தில் எவரேனும் ஆளின் கைது பற்றிய காரணத்தை அறிவிப்பது கைது செய்யும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(10) ஏதேனும் ஆதனம் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் கைப்பற்றப்படுகின்றவிடத்து அல்லது தடுத்து வைக்கப்படுகின்றவிடத்து கைப்பற்றுகை அல்லது தடுத்தலால் பாதிப்புறுகின்ற ஆளொருவர் அத்தகைய ஆதனக் கட்டுக்காப்பு எவ்வாளிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அல்லது தடுத்துவைக்கப்பட்டதோ அவ்வாளுக்கு அத்தகைய ஆவணம் தொடர்பில் பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

(11) சனாதிபதியானவர், காலத்துக்குக்காலம் கட்டளைமூலம் அத்தகைய காலப்பகுதிக்கு இலங்கையிலுள்ள ஏதேனும் இடப்பரப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பொது ஊர்வலங்கள் அல்லது பொதுக் கூட்டங்களை நடாத்துதலைத் தடுக்கலாம் என்பதுடன் அது அத்தகைய விதிவிலக்குகளுக்கமைவானதாகும்.

(12) பொலிசு தலைமையதிபதி இலங்கையின் ஏதேனும் இடப்பரப்பு தொடர்பில் ஆளெவரும் அவ்விடப்பரப்பில் பொலிசு நிலையமொன்றின் பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்ட எழுத்திலான அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மணி நேரத்தினுள் அல்லது அத்தகைய காலப்பகுதியின் போது ஏதேனும் பொது வீதியில், புகையிரதப் பாதையில், பூங்காவில், பொது போக்குவரத்து மைதானத்தில், வேறு ஏதேனும் பொது இடத்தில் இருத்தலாகாது எனக் கட்டளைமூலம் பணிக்கலாம்.

## பாகம் V

## தவறுகளும் தண்டங்களும்

தவறுகள்.

12. (1) எவரேனுமாள் எவரும் -

(அ) ஆதனத்துக்கான, அசைவுள்ளதாயினுஞ்சரி அசைவற்றதாயினுஞ்சரி, அழிவை அல்லது சேதத்தை விளைவிக்கின்ற ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது அத்தகைய ஆதனத்தின் பெறுமதியை அல்லது பயன்பாட்டை அழிக்கின்றவாறாக அல்லது குறைக்கின்றவாறாக அத்தகைய ஏதேனும் ஆதனத்தில் அத்தகைய மாற்றமெதனையும் செய்கின்ற; அல்லது

(ஆ) எவரேனுமாளுக்கு மரணத்தை அல்லது விபத்தை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்க எத்தனிக்கின்ற;

(இ) வேறு எவரேனும் ஆள்மீது குற்றவியல் அச்சுறுத்தலை அல்லது தாக்குதலைப் புரிகின்ற; அல்லது

(ஈ) வெற்றிடமாக விடப்பட்டுள்ள அல்லது பாதுகாக்கப்படாததாக விடப்பட்டுள்ள அல்லது சேதமடைந்துள்ளதாகவுள்ள அல்லது அழிவடைந்துள்ளதாகவுள்ள எவையேனும் வளவுகளில் ஏதேனும் பொருளைத் திருடுகின்ற; அல்லது

(உ) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 345, 354, 355, 356, 357, 358, 359, 360, 360அ, 360ஆ, 360இ,364 365, 365அ, 365ஆ என்னும் பிரிவுகளின் கீழான ஏதேனும் தவறைப் புரிகின்ற; அல்லது

(ஊ) ஏதேனும் ஆதனத்தில் திருடுகின்ற, வலிந்து பறிக்கின்ற அல்லது கொள்ளையிடுகின்ற; அல்லது

(எ) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 408 முதல் 426 வரையிலான பிரிவுகளுள் ஏதேனும் பிரிவின்கீழான தவறெதனையும் புரிகின்ற; அல்லது

(ஏ) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 427 முதல் 446 வரையிலான பிரிவுகளுள் ஏதேனும் பிரிவின்கீழான தவறெதனையும் புரிகின்ற அல்லது எவையேனும் அத்தகைய வளவுகளிலிருந்து எவையேனும் பண்டங்களை அல்லது பொருட்களை சட்டமுரணாக நீக்குகின்ற அல்லது நீக்குவதற்கு எத்தனிக்கின்ற; அல்லது

(ஐ) உட்பந்தி (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), அல்லது (ஏ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலைச் செய்வதற்கான குறிக்கோளைக் கொண்டதும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் 138 ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டவாறானதுமான சட்டவிரோதக் கூட்டமொன்றின் உறுப்பினரொருவராக இருக்கின்ற; அல்லது

(ஒ) இப்பந்தியின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ) அல்லது (ஐ) என்னும் உட்பந்தியின்கீழ் அவர் புரிந்திருக்கின்ற (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் அல்லது அதே செயல்களினால் அமைத்துருவாக்கப்படும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான வேறேதேனும் தவறைப் புரிகின்ற,

எவரேனுமாள், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையில், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது இவ்வொழுங்குவிதிகளில் உள்ளவையெவையும் எவ்வாறிருப்பினும், அதுபற்றி மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஆயுள் தண்டனைக்கு அல்லது இருபது ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டணைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஆதனத்தின் தற்பாதுகாப்புப் பற்றிய உரிமையுடன் தொடர்புடையதும், அத்தகைய உரிமையைப் பிரயோகிக்கையில் பிழைசெய்பவர் ஒருவருக்கு மரணத்தை அல்லது வேறு தீங்கை விளைவிக்க முடியுமான சூழ்நிலைகளை ஏற்படுத்துதல் தொடர்பில்(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் 96 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அப்பிரிவின் முடிவில் பின்வருவன சேர்த்துக்கொள்ளப்பட்டன என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும்:-

"ஐந்தாவதாக, 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளின் 12 ஆம் ஒழுங்குவிதியின்கீழான ஏதேனும் தவறு.".

(3) (அ) தவறானது புரியப்பட்ட நேரத்தில் அல்லது அதனை அண்மித்த நேரத்தில் நிலவிய குடியியல் அமைதிக்குலைவை அல்லது இனரீதியில் உந்தப்பட்ட கலவரங்களை முன்னெடுத்துச் செல்வதில் அல்லது அவை சம்பந்தமாக அல்லது அவற்றின்போது புரியப்பட்டதென சட்டத்துறைத் தலைமையதிபதி திருப்தியுற்றால், அவரினால் மேல் நீதிமன்றத்துக்கு இவ்அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவறு தொடர்பிலான குற்றப்பகர்வொன்று அனுப்பி வைக்கப்படலாம்:

ஆயின், ஏதேனும் தவறு புரியப்படுவதுடன் தொடர்புடைய சூழ்நிலைகளைக் கவனத்துட்கொண்டு, சட்டத்துறைத் தலைமையதிபதி, அவர் குறித்துரைக்கின்றவாறான அத்தகைய வழக்குகள் அல்லது அத்தகைய வகுதியினவான வழக்குகள் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளை நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்குமாறு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன், அதன்மேல், அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் எழுத்திலான அதிகாரத்துடன் தொடுக்கவும்படலாம் என்பதுடன் அத்தகைய தவறுகள் தொடர்பான விளக்கம் தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XVII இன் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(ஆ) வழக்கு நடவடிக்கைகள் நீதிவான் நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படுகின்றவிடத்து, தவறாளர் இவ்வொழுங்குவிதிகளின் 24 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

அதிருப்தியைத் தடுத்தல்.

13. ஆளெவரும் -

(அ) பின்வருவோராகவுள்ள ஆட்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தலாகாது -

(i) பகிரங்க அலுவலர்கள்; அல்லது

(ii) குடியரசின் சேவையில் ஈடுபடுவோர்; அல்லது

(iii) அத்தியாவசிய சேவைகளைப் புரிவதில் ஈடுபடுவோர்; அல்லது

(ஆ) பகிரங்க அலுவலரொருவராக அல்லது ஆளொருவராக மேற்சொல்லப்பட்ட அத்தகையதொரு மீறுகையில் உருவாக்கும் அவரது கடமையின் மீறுகையில் ஏதேனும் ஒன்றைச் செய்வதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு (அ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாளை தூண்டுவதற்கு முயற்சித்தல் ஆகாது.

துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றை விநியோகித்தல்.

14. பொதுமக்கள் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்குக்கு அல்லது சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கு பங்கமாகவிருக்கும் உள்ளீடுகளை கொண்டுள்ள எவையேனும் சுவரொட்டிகளை, கைத்துண்டுகளை அல்லது துண்டுப்பிரசுரங்களை ஆளெவரும், பொதுமக்களுக்கு தெரியக்கூடிய ஏதேனும் இடத்தில் ஒட்டுதலோ அல்லது பொதுமக்களிடையே விநியோகித்தலோ ஆகாது.

வதந்திகளையும் பொய்யான கூற்றுக்களையும் தெரிவித்தல் அல்லது பரப்புதல்.

15. ஆளெவரும் வாய்மொழி மூலமாகவோ அல்லது டிஜிற்றல் முறைகள் அல்லது சமூக ஊடகங்கள் உட்பட எத்தகையனவுமான வேறெவையேனும் முறைகள் மூலமாகவோ பொதுமக்களிடையே பயத்தை ஏற்படுத்தும், பொது அமைதியைக் குலைக்கும் அல்லது இன வன்முறையை ஏற்படுத்தும் சாத்தியமுள்ள அல்லது தவறொன்றைப் புரிவதற்குத் தூண்டும் சாத்தியமுள்ள எவையேனும் வதந்திகளை அல்லது பொய்யான கூற்றுக்களை அல்லது ஏதேனும் தகவலை அல்லது படவுருவை அல்லது செய்தியைத் தெரிவித்தல் அல்லது பரப்புதல் ஆகாது.

பொய்யான கூற்றுக்கள்.

16. எவரேனுமாள் -

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஏதேனும் அத்தகைய ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைப் பின்பற்றி செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளுக்கு பதிலளிக்கையின் போது முக்கியமான ஒரு விபரத்தில் போலியானதென்று அவர் அறிந்த அல்லது அவ்விதம் நம்புவதற்கு நியாயமான காரணங்களுடைய ஏதேனும் கூற்றைச் செய்தால் அல்லது ஏதேனும் தகவலைக்கொடுத்துதவினால்; அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் ஆக்குவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கணக்கு, வெளிப்படுத்தல், மதிப்பீடு, விபரத்திரட்டு அல்லது வேறு ஆவணம் என்பவற்றில் மேலே சொல்லப்பட்ட அத்தகையகூற்றொன்றைச் செய்தால்,

தவறொன்றைப் புரிகின்றார்.

*புலனாய்வு நோக்கத்துக்காக தடுத்துவைத்தல்.*

*17. (1)* இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள், பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் நியதிகளின்படி புலனாய்வு நோக்கத்துக்காக தடுத்துவைக்கப்படலாம். அத்தகைய ஆள், அத்தகைய கட்டளையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க பதினான்கு நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குத் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.

*(2)* முற்போந்த ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள் இயன்றளவு விரைவாக பொலிசு நிலையமொன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு அங்கு தடுத்துவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவரது தடுப்புக்கான கட்டளையொன்று அவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்டாலொழிய நீதவான் முன்னிலையில் அவரை முன்னிலைப்படுத்துதலும் வேண்டும்.

*(3)* இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தடுப்புக்காவலிலுள்ள அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆளொருவர் அவரது உறவினர்களுடன் தொடர்பாடுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(4)* இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தடுத்துவைக்கப்பட்ட ஆளொருவரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியொருவர் அத்தகைய ஆளை அணுகுவதற்கான உரிமையையும் அத்துடன் அத்தகைய ஆளை தடுத்துவைப்பதற்கான கட்டளையை ஆக்கியுள்ள பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அத்தகைய ஆள் சார்பில் பிரதிநிதித்துவம் செய்வதற்கான உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*மிரட்டல் முதலியவற்றை தடுத்தல்.*

*18. (1)* ஆளெவரும் ஏதேனும் பிரதேசத்தில் வேறு யாரேனும் ஓர் ஆள் வதியும் அல்லது வேலை செய்யும் அல்லது தொழில் நடத்தும் அல்லது தற்செயலாகத் தங்கும் வீட்டில் அல்லது இடத்தில் அல்லது வீட்டிற்கு அண்மையில் அல்லது இடத்திற்கு அண்மையில் அந்த வீட்டில் அல்லது இடத்திலுள்ள யாரேனுமோராளை மிரட்டுவது போன்ற அல்லது அப்படியான ஒருவர் அவ்வீட்டிற்குள் நுழைவதை அல்லது வீட்டில் இருந்து வெளிக்கிளம்புவதைத் தடைசெய்வது போன்ற அல்லது அமைதியை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் காத்து நிற்கக்கூடாது.

*(2)* இவ்வொழுங்குவிதியில்–

"மிரட்டல்" என்ற சொல்லமைப்பு ஓர் ஆளினது மனத்தில் தமக்கு அல்லது தமது குடும்பத்திலுள்ள யாரேனும் உறுப்பினருக்கு அல்லது தங்கிவாழுநர்கள் எவருக்கும் ஊறு விளைந்துவிடுமோ அல்லது வன்முறை அல்லது ஆளுக்கான அல்லது ஆதனத்துக்கான சேதம் ஏற்படுமோ என்ற நியாயமான அச்சத்தை அவரின் மனதில் ஏற்படுதல் என்று பொருள்படும்; அத்துடன்

"ஊறு" என்ற சொல் ஆள் ஒருவருக்கு அவரது வியாபாரம், தொழில், தொழிலீடுபாடு அல்லது வேறு வருமான மூலங்கள் தொடர்பான பிழையான நடவடிக்கையால் ஏற்படுத்தப்படும் ஊறுகளை அல்லது சேதங்களை உள்ளடக்கும்.

*அதிகாரத்திலுள்ள ஆட்களை எதிர்த்தல் அல்லது அவர்களுக்குத் தடையாகவிருத்தல்*

*19.* ஆளெவரும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அத்தகைய ஒழுங்குவிதிகளின்கீழ் வேறோராளுக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அவ்வாள் பிரயோகிக்கையில் அல்லது அத்தயை வேறெவரேனுமாளை எதிர்த்தலோ அல்லது அவருக்கு தடையாகவிருத்தலோ ஆகாது.

*வீதிகள்,புகையிரத பாதை முதலியனவற்றை தடைசெய்தல் அல்லது சேதப்படுத்தல்*

*20.* ஆளெவரும், சட்டரீதியிலான அதிகாரமின்றி, ஏதேனும் பொது வீதிக்கு, பாலத்திற்கு, சிறுபாலத்திற்கு அல்லது ஏதேனும் புகையிரதப் பாதைக்கு ஏதேனும் பொது வீதிக்கு இடம்பெயர்க்கும் வாகனத்திற்கு தடையாகவிருத்தலோ அல்லது அவற்றை சேதப்படுத்தலோ ஆகாது.

*தவறுகளைப் புரிவதற்கு எத்தணித்தல்*

*21.* ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழான தவறொன்றை –

*(அ)* புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது அதனைப் புரிவதற்கு தயார்ப்படுத்திய ஏதேனும் செயலைச் செய்வதற்கு எத்தனிக்கின்ற; அல்லது

(ஆ) புரிவதற்கு வேறோராளுக்கு உதவுகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற; அல்லது

(இ) புரிவதில் வேறோராளுடன் சேர்ந்து சதிசெய்கின்ற

எவரேனுமாள், அத்தவறுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் அதே முறையில் அவற்றுக்கிணங்க விசாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய தவறுக்காக விதித்துரைக்கப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

தவறொன்றில் உதவுதல்

22. எவரேனும்ஆள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகவுள்ளாரென்பதை அறிந்து கொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான காரணத்தை கொண்டிருக்கும் அந்தச் சொல்லப்பட்ட தவறுக்காக அவ் ஆளைக் கைது செய்வதை அல்லது தண்டிப்பதைத் அவ் வேறு ஆளுக்கு தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும்,ஆளெவரும் உதவியளித்தலாகாது.

ஆட்களின் குழுவினரினாலான தவறுகள்

23. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழான தவறொன்று ஆட்களின் குழுவொன்றினால் புரியப்பட்டவிடத்து -

(அ) அக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின் அதன் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது கூட்டிணைக்கப்பட்டவரும்; அத்துடன்

(ஆ) அக்குழுவானது குழுமமொன்றாகவிருப்பின் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்குடைமையாளரும்

அத்தவறானது அவரது அறிவுக்குட்படாது புரியப்பட்டதாக எண்பித்தலொழிய அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான முறையான எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்திருந்தார் என எண்பித்தாலொழிய தவறொன்றுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டங்கள்.

24.(1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை, அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்பை அல்லது சுமத்தப்பட்ட நிபந்தனையை மீறும் அல்லது அவற்றுக்கு இணங்கத் தவறும் எந்தவோராளும், குற்றமொன்று புரியந்தவராகி அத்தகைய அவ்வொழுங்குவிதியிற் காணப்படும் எவையேனும் சிறப்பான ஏற்பாடுகளுக்கமைய யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னரான அல்லது நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து மூன்று மாதத்திற்குக் குறையாததும் ஐந்தாண்டிற்கு மிகையாததுமான ஒரு காலத்திற்குக் கடூழியச் சிறைத் தண்டனைக்கு ஐயாயிரம் ரூபாவிற்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு குற்றத்திற்கு அவ்வொழுங்குவிதியில் தண்டனையெதுவும் விதித்துரைக்கப்பட்டுள்ள விடத்து, அத்தகைய குற்றத்தை புரியும் ஓர் ஆள் யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னராக, அல்லது நீதிவானொருவர் முன்னராக விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்படும் அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306(2) என்னும் பிரிவு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றத்திற்காகக் குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவோராளுக்கும் ஏற்புடையதாகாது.

## பாகம் VI

### புலனாய்வுகள், விளக்கங்கள் முதலியன

தகவல் வெளிப்படுத்துவதற்கான கடமை.

25. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழான தவறொன்று புரிவதற்கானவோர் உட்கருத்து எத்தனிப்பு அல்லது தயார்செய்தல் பற்றிய அல்லது அது புரியப்பட்டது பற்றி அறியவரும் எவரும் அதுபற்றிய தகவலை மிக அண்மையிலுள்ள கிராம அலுவலருக்கு மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட தகவலைக் கொடுக்கத் தவறும் அல்லது மறுக்கும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் ஏதேனும் தவறு பற்றிய ஏதேனும் தகவலை பெற்றுள்ளவரான எவரேனும் கிராம அலுவலர் அருகிலுள்ள பொலிசு நிலையத்துக்கு அத்தகைய தகவலை உடனடுத்துக் கொடுத்தல் வேண்டும்.

*புலனாய்வு செய்கின்ற பொலிசு அலுவலர்களின் தத்துவங்கள்.*

26. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புலனாய்வுசெய்கின்ற எவரேனும் பொலிசு அலுவலர்–

(அ) தவறின் நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளுடன் பரிட்சயமாகவுள்ள சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாளை வாய்மொழியாக சோதிக்கலாம் என்பதுடன் அவ்வாறு சோதிக்கும் போது அவ்வாளினால் செய்யப்பட்ட ஏதேனும் வாக்குமூலத்தை எழுத்தில் பதிதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் அத்தகைய வாக்குமூலம் அதனை ஆக்குபவர் மற்றும் அதனைப் பதிவுசெய்கின்ற பொலிசு அலுவலர் இருவரினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்:

மேலும், ஆயின் ஏதேனும் அத்தகைய வாக்குமூலத்தை கையொப்பமிட மறுக்கின்ற ஆளொருவரின் விடயத்தில் அத்தகைய மறுப்பு பொலிசு அலுவலரினால் பதிவுசெய்யப்படுதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆளின் கையெழுத்து, புகைப்படங்கள், விரலடையாளங்கள் மற்றும் வேறு அடையாளம் காணுகின்ற மாதிரிகளைப் பெறலாம்;

(இ) அத்தகைய ஆளைத் தேடலாம் அல்லது அத்தகைய ஆள் வதிகின்ற வீடு அல்லது வேலைத்தலம் என்பவற்றை தேடுகை செய்யலாம்;

(ஈ) ஏதேனும் அத்தகைய தவறுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்டதென சந்தேகிக்கப்படுகின்ற ஏதேனும் இடம், கட்டடம், வாகனம்,அல்லது கலத்தினுள் உள்நுழைந்து தேடுகைசெய்யலாம்; அத்துடன்

(உ) ஏதேனும் தந்திச் செய்தி. அஞ்சல் ஆவணம் அல்லது ஏதேனும் வங்கியிலுள்ள வேறு புத்தகம் அல்லது ஆவணம் உட்பட எவ்வகையினதுமான அசைவுள்ள ஆதனம் எதனையும் சோதனையிட்டு உடைமையில் எடுக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் வங்கியிலிருந்து அல்லது அஞ்சல் அலுவலகத்திலிருந்து ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைப் பெறுவதற்கு நாடமுன்னர் விடயத்திற்கேற்ப, அத்தகைய வங்கி அல்லது அஞ்சல் அலுவலகத்துக்குப் பொறுப்பாகவுள்ள முகாமையாளர் அல்லது அலுவலருக்கு அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் அத்தகைய புலனாய்வு நோக்கத்துக்கு தேவைப்படுகின்றதென உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத பதவியொன்றை வகிக்கும் பொலிசு அலுவலரினால் முன்னதான எழுத்திலான தகவல் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

*சந்தேகிக்கப்பட்ட ஆட்களிடம் இருக்கும் ஆவணம்.*

27. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றுடன் தொடர்புபட்டவர் என சந்தேகிக்கப்பட்ட எவரேனும் ஆளின் உடைமையில் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது பத்திரம் அத்தகைய தவறு தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக எவையேனும் நடவடிக்கைகளில் இயைபானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புத்தகம், ஆவணம் அல்லது பத்திரத்தின் உள்ளீடுகள் அதற்கான மேலும் எண்பிப்பின்றி அத்தகைய ஆளுக்கெதிரான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*விசாரிப்பதற்குள்ள உரிமையும் உதவி செய்வதற்கான கடமை.*

28. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழான தவறொன்றை நுண்ணாய்வு செய்யும் எவரேனும் பொலிசு அலுவலரொருவர் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் –

(அ) அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது கட்டுக்காப்பில் இருப்பவர் உட்பட எவரேனும் ஆளை, விசாரணை செய்ய அல்லது அத்தகைய விசாரணைக் காலத்தின்போது அத்தகைய விசாரணை நோக்கமாக இடத்திற்கிடம் எடுத்துச் செல்ல தத்துவம் கொண்டுள்ளார்; அத்துடன்

(ஆ) அத்தகைய புலனாய்வு நோக்கத்துக்காக அவசியமான ஆவணம் உள்ளடங்கலாக ஏதேனும் பொருளை அல்லது பண்டத்தை அவ்வாறு கேள்விக்குட்படுத்தப்பட்ட எவரேனும் ஆட்களிடமிருந்து பொறுப்பிலெடுப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

(2) பொலிசு அலுவலரொருவருக்கு அல்லது உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளுக்கு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் விசாரணை செய்யப்படும் குற்றம் சம்பந்தமாக சகல உதவிகளையும் வழங்குதல் ஒவ்வொரு ஆளினதும் கடமையாதல் வேண்டும். அத்துடன் பந்தி (1) இன் உட்பந்தி (அ) இன்கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வொரு ஆளும் அவரிடம் கேட்கப்படும் சகல கேள்விகளுக்கும், உண்மையான பதிலிருக்க வேண்டுமென்பதுடன் வேறேனேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எப்பிரதியிலாவது அடங்கியுள்ள அல்லது தெரிந்து விசாரணை சம்பந்தமான விடயங்கள் எந்த வகையில் விசாரணை செய்யப்படுவதற்கு இப்பிரதியிலுள்ள அல்லது வேறு விடயம் கிடைத்திருப்பினும் அவை யாவும் வெளியிடப்படுதல் வேண்டும்;

(3) ஓராம் பந்தியின் கேள்விக்குட்படுத்தப்பட்ட ஒவ்வோராளும் அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலுள்ள அல்லது உடைமையிலுள்ள ஆவணம் உட்பட ஏதேனும் பொருளை அல்லது வேறு பண்டத்தை ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புலனாய்கின்ற பொலிசு அலுவலரொருவருக்கு அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு, அல்லது அத்தகைய பொலிசு அலுவலரினால் அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் ஒப்படைக்கப்படும்படி பணிக்கப்படும்போது அவ்வாறு செய்தல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையை மீறுகின்றவரான எவரேனும் ஆள்இவ்வொழுங்குவிதியின் 24 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

பொலிசு அலுவலரை அணுகுவதற்கான உரிமை.

29. எவரேனுமாள் தடுப்பில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கும் காலத்தின்போது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்யும் பொலிசு அலுவலரொருவர், அத்தகைய புலனாய்வு நோக்கத்துக்காக நியாயமான நேரங்களில் அத்தகைய எவரேனுமாளை அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏனைய தத்துவங்களுக்கு மேலதிகமாக பொலிசு அலுவலரின் தத்துவங்கள்.

30. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பொலிசு அலுவலர் ஒருவரின் தத்துவங்கள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அவருக்குள்ள தத்துவங்களுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டும் அத்துடன் அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகாது.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல்.

31. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலுள்ள வழக்குநடவடிக்கைகள் நீதிமன்றத்தின் வேறேதேனும் அலுவல்களுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டும்.

விசாரணைகளும் விளக்கங்களும்.

32. (1) இதனகத்து வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிரவும், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதாக குற்றச் சாட்டப்படும் தவறொன்று தொடர்பிலான நடவடிக்கைகள் அப்போதைக்கு அவ்வாள் உள்ள இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள இலங்கையிலுள்ள தோதான நீதிமன்றத்தின் முன்னர் எடுக்கப்படலாம்.

(2) எந்த நீதிமன்றத்தில் –

(அ) அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் ஆட்களினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் தவறுகள்; அத்தவறுகளை ஆக்கும் செயல்கள் அல்லது செய்யாமைகள் ;

(ஆ) அத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை நேரடியாக வாயினுஞ்சரி மறைமுகமாகவாயினுஞ்சரி பிரயோகிப்பதன் அல்லது புரிவதன் அல்லது

அவ்விதம் கருதப்படும் பிரயோகத்தின் அல்லது புரியப்படுதலின் விளைவானமையால் அல்லது அவற்றிலிருந்து எழுந்தனவாய் அல்லது அவற்றின் போது செய்யப்பட்டனவாய் அல்லது செய்யாது தவிர்க்கப்பட்டனவாய் உள்ளவிடத்து-

அவை விசாரிக்கப்படுதல் அல்லது விளங்கப்படுதல் வேண்டும் என்பதனைச் சட்டத்துறைத் தலைமை அதிபதி தீர்மானிக்கலாம். அத்தகைய நீதிமன்றம், அத்தகைய தவறுகள் அந்நீதிமன்றத்தின் இடப்பரப்பு நியாயாதிக்க எல்லைக்குள் புரியப்பட்டிருப்பின் அத்தவறுகள் விசாரிக்க அல்லது விளங்க நியாயாதிக்கம் கொண்டிருக்க வேண்டிய நீதிமன்றமொன்றாதல் வேண்டும்.

(3) குற்றச்சாட்டுக்களில் ஆக குறைந்தது ஒன்றாவது மேலே (2) ஆம் பந்தியில் (ஆ) எனும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றுக்கானதாக இருக்குமிடத்து, சட்டத்துறைத் தலைமை அதிபதி வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், மேல் நீதிமன்றத்துக்கு நேரடியாகக் குற்றப்பகர்வொன்றை அனுப்பி வைக்கலாம் என்பதுடன், குற்றம் சாட்டப்பட்டவர் அவ்வாறு முன்வைக்கப்பட்ட குற்றப்பகர்வின் மீது யூரி இல்லாமலே விளங்கப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் தவறு எந்த நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட அல்லது விளங்கப்பட வேண்டுமென இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, அவர் தமது எழுத்திலான சிறப்பாணை மூலம் அத்தகைய நீதிமன்றத்தை அத்தவறு விசாரிக்கப்படவேண்டிய அல்லது விளங்கப்படவேண்டிய நீதிமன்றமெனச் சுட்டிக்குறித்தல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க, அத்தகைய விசாரணை அல்லது விளக்க நடவடிக்கைகளுடன் பதிவேட்டில் கோப்பிடப்படவேண்டிய அத்தகைய சிறப்பாணை அதிகாரத்தின் மேல் அந்நீதிமன்றத்தினால் விசாரணை அல்லது விளக்கம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாம் பந்தியின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியின் முடிபு ஒன்று பின்வருவனவற்றுக்கு ஏற்புடையற்பாலதாக ஆக்கப்படலாம்:-

(அ) இலங்கையடங்கிலும் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் குறிப்பிட்ட இடப்பரப்பிலும் அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் ஆட்களினால் புரியப்பட்டிருப்பதாகச் சார்த்தப்படும் எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(ஆ) இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டிருப்பதாகச் சார்த்தப்பட்ட எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(இ) இலங்கையடங்கிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பிலும் ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டிருப்பதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(ஈ) இலங்கையிடங்கிலும் அவ்வாறு இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பிலும் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த ஆளினால் அல்லது எவரேனும் குறிப்பிட்ட ஆளினால் புரியப்பட்டிருப்பதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(உ) இலங்கையடங்கிலும் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் குறிப்பிட்ட இடப்பரப்பிலும் எவரேனும் குறிப்பிட்ட ஆளினால் புரியப்பட்டிருப்பதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட தவறுக்கு.

(6) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும் போது, ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து வேறு ஏதேனும் நீதிமன்றத்திற்கு அல்லது இடத்திற்கு இடமாற்றுவதற்கும் ஏதேனும் குற்றவியல் தவறுபற்றி விசாரிப்பதற்கும் (அல்லது ஏதேனும் குற்றவியல் தவறை விளங்குதல்) சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு தத்துவமளிக்கின்றதான 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவானது அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவு வலுவில் இல்லாதிருந்தால் போன்று பயனுறுதல் வேண்டும்.

*சட்டததுறைத் தலைமையதிபதியின் வலுவளிப்பு*

*33. (1) 12 ஆம்ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய–*

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கு எதிரான தவறொன்றுக்காக; அல்லது

(ஆ) அத்தகைய தவறாக அமைகின்ற செயல் அல்லது செய்யாமை நேரடியாகவாயினுஞ்சரி அல்லது நேரடியாகவல்லாமலுஞ்சரி அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் தத்தவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதன் அல்லது புரிவதன் விளைவாக இருக்குமிடத்து அல்லது அவற்றிலிருந்து எழுகின்றவிடத்து,அல்லது பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது செய்யப்படுவதாக உறுதி பூண்டுள்ளவிடத்து, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு எதிரான தவறொன்றுக்காக;

சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான வலுவளிப்பினால் அல்லது வலுவளிப்புடன் தவிர நீதிவான் நீதிமன்றத்தினால் குற்றவழக்கெதுவும் தொடரப்படுதல் ஆகாது.

(2) சனாதிபதியானவர் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கு எதிராக ஏதேனும் தவறு தொடர்பில், (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாதென சனாதிபதியானவர் கட்டளைமூலம் வெளிப்படுத்தலாமென்பதுடன் அதற்கிணங்க அத்தகைய கட்டளை வலுவில் இருக்கும் காலம் வரையில், அப்பந்தி அத்தகைய ஏதேனும் தவறுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

*மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம்*

34. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி அல்லது வேறு எழுத்திலான சட்டம் எது எவ்வாறிருப்பினும், அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவறுக்கு சட்டத்துறைத் தலைமையதிபதியின் குற்றப்பகர்வின் மீது நீதாயவிளக்கம் உள்ளிட்ட விளக்கமானது நடாத்தப்படலாம் என்பதுடன் அதன் மேல் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் பூர்வாங்க விசாரணை ஒன்று இன்றி விடயத்திற்கேற்ப மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் யூரர் சபை ஒன்று இல்லாமலோ விளங்கப்படுதலும் வேண்டும்.

ஆயின், பூர்வாங்க விசாரணை ஒன்றில் பதியப்படும் சான்று குற்றப்பகர்வு ஒன்றைத் தயாரிப்பதற்கு அவசியமாக இருக்கும் என சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, பூர்வாங்க விசாரணை ஒன்றை நடாத்தும் படி அவர் பணிக்காலம். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் அத்தகைய பூர்வாங்க விசாரணைக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனதாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்கு விதிகளின் நியதிகளின்படி தவறுபுரிந்துள்ளதாக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளெவரும் விதிவிலக்கான சூழ்நிலையின் கீழ் தவிர பிணையில் செல்ல அனுமதிக்கப்படலாகாது.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XI ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.*

(3) நீதாய மேல்நீதிமன்றம் உட்பட இவ்வொழுங்குவிதிகளின் கீழ் மேல்நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம் ஒன்று விடயத்திற்கேற்ப, யூரர் சபை இன்றி மேல்நீதிமன்றம் முன்னரான அல்லது நீதாய மேல் நீதிமன்றம் முன்னரான வேறு விளக்கங்களுக்காக வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் இயன்றவரை விரைவாகவும் ஏற்பாடுசெய்யப்பட முறையிலும் நடாத்தப்படலாம்.

35. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றறவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XI ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் நடாத்தப்படும் ஏதேனும் புலனாய்வுகளிற்கு ஏற்புடையதாகாது.

## பாகம் VII

### நானாவிதமானவை

*நானாவிதமான தத்துவங்கள்.*

36. (1) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும்போது, சாஜன்ட் தரத்திற்கு குறையாத பதவியிலுள்ள எவரேனும் பொலிஸ் அலுவலர், கோப்ரல் தரத்திற்கு குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கைத் தரைப்படை

உறுப்பினர், தலைமை கடலோடித் தரத்திற்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கை கடற்படை உறுப்பினர், அல்லது கோப்ரல் தரத்திற்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கை வான்படை உறுப்பினர் ஏதேனும் பொது வீதி, புகைவண்டிப் பாதை, பொதுப் பூங்கா, பொது பொழுதுபோக்கிடம் அல்லது வேறு பொது இடம், கடற்கரை, என்பவற்றில் அல்லது அவற்றுக்கண்மையில் அல்லது ஏதேனும் பொதுக்கட்டிடம், அல்லது அரசாங்கத் திணைக்களம் அமைந்துள்ள வளவில் அல்லது வளவுக்கண்மையில் அல்லது வளவின் அயலில் நிற்கும் எவரேனும் ஆளை அல்லது எவரேனும் ஆட்களை அந்த இடத்திலிருந்து அகலும்படி கட்டளையிடலாமென்பதுடன் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதல் விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆள் ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

(2) ஓராம் ஆம் பந்தியின்கீழான கட்டளை ஒன்றை வழங்குவதற்கு தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அத்தகைய கட்டளை வழங்கப்படுவதன்மேல், எவரேனும் ஆள் அக்கட்டளையுடன் இணங்கியொழுகாவிடின், அல்லது கட்டளையுடன் இணங்கியொழுகாத தீர்மானம் ஒன்றை காட்டுவதற்கான அத்தகைய முறையொன்றில் நடந்து கொண்டால் அத்தகைய அலுவலர்,அவசியமாக இருக்கக்கூடியவாறாக அத்தகைய உதவியுடன் ஆயுதந்தாங்கிய வலோத்காரம் உட்பட வலோத்காரம்மூலம் அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு முன்வரலாம் என்பதுடன் அத்தகைய ஆளை அப்புறப்படுத்துவதனை அல்லது கைது செய்வதனை மற்றும் மறித்துவைப்பதனைச் செய்விக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும்போது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் பிரிவுகள் 306 (1), (2) மற்றும் (4) ஆம் பிரிவுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்ததாக குற்றம் சாட்டப்படும் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்படும் எவரேனும் ஆளுக்கு அல்லது அவர்தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

கேள்விகளுக்கு மறுமொழியளிக்கும் கடமை.

37. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட ஆள் ஒருவர், அத்தகைய கட்டுக்காவல் காலப்பகுதியின் போது மற்றும் தடுத்து வைத்தல் காலப்பகுதியின் போது எவரேனும் பொலிசு அலுவலரால் அல்லது தரைப்படை ஏவுநரால், கடற்படை ஏவுநரால் அல்லது வான்படை ஏவுநரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரால் வினவப்படலாமென்பதுடன் அவ்வாறு அவரிடம் வினவப்படும் வினாக்களுக்கு விடையிறுத்தல் அவ்வாறு வினவப்படும் ஆளின் கடமையாதலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழ் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட எவரேனும் ஆளை வினவும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய வினவலுடன் சம்பந்தப்பட்ட வேறு ஏதேனும் நோக்கத்திற்காக (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் தடுத்து வைத்திருக்கும் அல்லது கட்டுக்காவலில் வைத்திருக்கும் ஏதேனும் இடத்திலிருந்து அத்தகைய ஆளை அகற்றிச் சென்று ஒரு தடவையில் ஏழு நாட்களுக்கு மேற்படாத காலமொன்றுக்கு அத்தகைய அலுவலரின் தற்காலிகக் கட்டுக்காவலில் அவரை வைத்திருக்கலாம்.

தகவல் பெறுவதற்கு அல்லது பொருட்களைச் சோதிப்பதற்கான தத்துவங்கள்.

38. (1) இவ்வொழுங்குவிதிகளிலடங்கியுள்ள எவையேனும்விசேட ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி,தேசிய பாதுகாப்பு நலன்கருதி அல்லது பொது ஒழுங்கை பேணுவதற்கு அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக அத்தகவலைப் பெறுதல் அல்லது பொருளைச் சோதித்தல் அவசியமானது அல்லது உசிதமானது என கோரிக்கை விடுக்கும் அதிகாரி அல்லது ஆள் அபிப்பிராயப்படுகின்றதகவலாக அல்லது பொருளாக உள்ளதும் அவ்வாறு குறித்துரைக்கப்படக்கூடியவாறானதும் அவரது உடைமையில் உள்ளதுமான அத்தகைய ஏதேனும் தகவலை அல்லது பொருளை அக்கோரிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு கொடுத்துதவும்படி அல்லது காண்பிக்கும்படி ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் கோரப்படுவதன்மீது எவரேனும் ஆள் அவ்வாறு செய்தல் வேண்டும் என்பதுடன் இவ்வொழுங்குவிதியின்கீழ் உரிய முறையில் விடுவிக்கப்பட்ட கோரிக்கையைப் பின்பற்றி அவரது உடைமையிலுள்ள ஏதேனும் தகவலை அல்லது பொருளைக் கொடுத்துதவுவதற்கு அல்லது காண்பிப்பதற்கு எவரேனும் ஆள், தவறினால் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இவ் ஒழுங்குவிதியில் “பொருள்” என்பது ஏதேனும் புத்தகத்தை, கணக்கை அல்லது ஆவணத்தை உள்ளடக்கும்.

*மோட்டார் வாகனச் சட்டத்தின் குறித்த ஏற்பாடுகளிலிருந்து ஆயுதத்தாங்கிய படை உறுப்பினர்களை விலக்களித்தல்*

39. ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர், பொது ஒழுங்கைப் பேணிக் காக்கும் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அவ்விதம் செய்யும்படி அதிகாரமளிக்கப்படும்போது, ஏதேனும் மோட்டார் வாகனத்தைச் செலுத்துகின்ற சமயத்தில் 1955 ஆம் ஆண்டு யூலை 8 ஆந் திகதிய 10,815 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1995 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (மாட்சிமை தங்கிய மகாராணியாரின் படைகளுக்கான விலக்களிப்புக்கள்) ஒழுங்குவிதிகளுக்கான அ என்னும் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான மோட்டார் வாகனச் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகளிலிருந்தும் அதன் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளிலிருந்தும் விலக்கப்பட்டவராதல் வேண்டும்.

40. (1) சனாதிபதியானவர், கட்டளைமூலம், கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கையிலுள்ள ஏதேனும் இடப்பரப்பிற்கு ஒருங்கிணைப்பு அலுவலராக இருப்பதற்கு பெயரினால் அல்லது பதவியினால் எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(2) ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவர் இலங்கையிலுள்ள ஏதேனும் இடப்பரப்பிற்கு கட்டளையால் சனாதிபதியினால் நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது வேறுவகையில் அரசாங்க அதிபருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது விதிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் யாவற்றையும் அவ்விடப்பரப்பில் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்திற்காக, ஒவ்வொரு குறிப்பீடானது அவ்விடப்பரப்பு விடயத்திலான அதனது விண்ணப்பத்தில் அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கான குறியீடு ஒன்றாக அமைத்துருவாக்கப்படுதலும் வேண்டும்.

(3) சனாதிபதியானவர், கட்டளைமூலம் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் இடப்பரப்புகளுக்கு (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஒருங்கிணைப்பு அலுவலர்மீது மேற்பார்வையை பிரயோகிப்பதற்கு பிரதான ஒருங்கிணைப்பாளராக இருப்பதற்கு பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம்.

(4) சனாதிபதியானவர், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தனது கடமைகளைப் புரிவதற்கென பிரதான ஒருங்கிணைப்பாளருக்கு உதவுவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்களை பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம்.

(5) பிரதான ஒருங்கிணைப்பாளர் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய பிரதான ஒருங்கிணைப்பாளராக அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது விதிக்கப்பட்ட அல்லது அவருக்கு குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை (4) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் பிரதி பிரதான ஒருங்கிணைப்பாளருக்கு கையளிக்கலாம்.

(6) மூன்றாம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் பிரதான ஒருங்கிணைப்பாளர் அல்லது (4) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் பிரதி பிரதான ஒருங்கிணைப்பாளர் அல்லது (5) ஆம் பந்தியின்கீழ் பிரதான ஒருங்கிணைப்பாளரின் தத்துவங்களை கையளிக்கப்பட்டுள்ள ஆள்–

(அ) இவ்வொழுங்குவிதியினால் எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலருக்கும் அவர் மேற்பார்வையைப் பிரயோகிக்கின்றவர்களும் அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்;

(ஆ) இவ்வொழுங்குவிதியினால் அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தின், கடமையின் அல்லது பணியின் அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலரினாலான பிரயோகம், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் பற்றி எந்த ஒருங்கிணைப்பு அலுவலர்மீது அவர் மேற்பார்வையைப் பிரயோகிக்கின்றாரோ அந்த ஒருங்கிணைப்பு அலுவலருக்கு விசேட அல்லது பொதுவான பணிப்பை வழங்கலாம்.

*பகிரங்க சேவையாளரின் கடமை முதலியன.*

41. நல்லெண்ணத்திலும் பக்கச்சார்பற்றும் மற்றும் பரந்துபட்டும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை வலுவுக்கிடுவதற்கு நல்லெண்ணத்தில் நடவடிக்கை எடுப்பதும் தமது திறனுக்கு எட்டியவரை இதிலடங்கியுள்ள ஒழுங்குவிதிகளின் எதனதும் மீறுகையொன்றைத் தடுத்தலும் பகிரங்க சேவையாளர்கள், பொலிசு அலுவலர்கள், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் மற்றும் அதிகாரசபையின் ஊழியர்கள் அனைவரினதும் கடமையாதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.